**O.S**.248/2012

மேகநாதன் **DW**1

நாள் : 21-11-2019.

**சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறார்.**

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ..**

11.04.2012 ம் தேதி 5 ம் பிரதிவாதி தாவா சொத்தில் ஒரு பகுதியை வாதிக்கு கிரையம் கொடுத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 29.12.2008 ன் விற்கிரைய ஒப்பந்தப்படியும், 27.02.2012 ம் தேதிய கிரைய பத்திரப்படியும் தாவா சொத்தின் ஒரு பகுதி 7 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. இதற்கு முன்னர் 2 ம் பிரதிவாதி லோகநாதன்தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. நம்பிக்கையின்பேரில் லோகநாதனுக்கு சொத்தை கொடுத்திருந்தார்கள். சுத்தக் கிரையம் செய்யவில்லை. லோகநாதன் சுவாதீனத்தில் இருந்ததால் அவர் 7 ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்றுவிட்டார் என்றால் அப்போதைக்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. பின்னிட்டு கிரையம் செய்திருப்பது தெரிய வந்தது. தாவா சொத்தைப் பொறுத்து எனக்கோ, 3 ம் நபர்களுக்கோ எந்தவித பாத்தியதையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகள் வாதியுடன் கூட்டு சேர்ந்து போலியாக ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. அதன்படி 20.07.2009 ம் தேதிய கிரைய பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்றும், அதை 7 ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. கிரையப் பத்திரத்தில் சொல்லியுள்ள தொகை கைமாறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 1/4 பாகம் உள்ளது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி லோகநாதனுக்கு விடுதலைப்பத்திரம் எழுதிக் கொடுத்த வகையில் தாவா சொத்து அவருக்கு பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் வாதியின் வழக்கும் சேர்ந்து தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

தாவா சொத்து 3 ஏக்கர் 33 சென்ட். அது விவசாய பூமி. மேற்படி பூமியில் கிணறு, பொது இடம், தடம் ஆகியவைகள் 49 சென்ட்டில் அமைந்துள்ளதா என்றால் ஆமாம். வாதி தங்கமுத்துவிற்கும், எனக்கும் எந்தவித விரோதமும் இல்லை. 1, 4 பிரதிவாதிகள் 20.07.2009 ல் 4 ல் 2 பாகம் கிரையம் வாங்கி அவர்கள் பொதுவில் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். பொதுவில் 4 ல் 3 பங்கு தங்கமுத்துவிற்கு பாத்தியம் என்றால் சரிதான். 11.04.2012 ம் தேதி 4 ல் 1 பாகம் கிரையம் பெற்றார். எனவே அவர்

கோரியுள்ள விளம்புகை சரி என்றும், 6. 7 பிரதிவாதிகளுக்கு அதில் எந்தவித பாத்தியதையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி தாவாவில் கோரியபடி தாவா சொத்தை 4 ஆக பிரித்து வாதிக்கு 1 பாகம் கொடுப்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.